**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.340/2022 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.D.கோவர்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | சுந்தரம் | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை - 04.08.2023**

நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 4 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதி தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 16.02.2020 தேதியிட்ட பிரதிவாதி, வாதி பெயருக்கு எழுதி கொடுத்த பிராமிசரி நோட்டு அசல் வா.சா.ஆ.1.

2. 23.05.2022 தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அளித்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.2.

3. 24.05.2022 தேதியிட்ட பிரதிவாதி அறிவிப்பினை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3.

4. 01.06.2022 தேதியிட்ட பிரதிவாதி வழக்கறிஞர் வாதியின் வழக்கறிஞருக்கு அளித்த பதில் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.4.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.